Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 04    (17-01-1993)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 884


**அவசர நோயாளரை அழைத்துசெல்ல தாமதம்**

கப்பல் மூலம் கொழும்பு செல்லும் கடும் சுகவீனமுற்ற நோயாளிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது இதனால் நோயாளிகள் பெரும் அவதியுறுகின்றனர். கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் பதிவுசெய்கின்ற போதிலும் குறைந்த எண்ணிக்கையான நோயாளிகளே அழைத்துச் செல்லப்படுவது வழக்கமாகிவிட்டது. யாழ். போதனா மருத்துவ மனையில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு செல்லும் (6ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலைத் தகர்த்து கிட்டு வீரச்சாவு

# இந்தியாவின் சதிவேலைக்கு பலி

## 9 போராளிகளும் வீரமரணம்



[யாழ்ப்பாணம்]

இந்திய அரசின் நாசகார சதிவேலை காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியான திரு. கிருஷ்ணகுமார் (கிட்டு) நேற்றுக் காலை வீரமரணம் அடைந்தார். தளபதி கிட்டுவுடன் 9 விடுதலை வேங்கைகளும் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையால் தடுக்கப்பட்ட புலிகளின் கப்பல் சென்னைக்கு சமீபமாக 12 கி மீற்றர் தூரம்வரை பலவந்தமாக கொண்டு செல்லப்பட்டது. அங்கு புலிவீரர்களை சரணடையுமாறு இந்திய கடற்படையினர் ஆயுத முனையில் நிர்ப்பந்தித்தனர். இந்தியாவிடம் சரணடைய மறுத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலைத் தகர்த்து தற்கொலை செய்து கொண்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் தளபதி கிட்டு பயணம் செய்த கப்பல் இந்திய கடற்படையினரால் சர்வதேச கடற்பரப்பில் வைத்து வழிமறிக்கப்பட்டதும் பின்னர் அது பலவந்தமாக சென்னை நோக்கி இழுத்து வரப்பட்டதும் தெரிந்ததே,

சென்னை நோக்கி அக்கப்பலை இழுத்து வந்த இந்திய கடற்படைக்கப்பல்கள் இந்திய கடற்பரப்பிற்குள் வந்ததும் கப்பலில் உள்ளவர்களைச் சரணடையுமாறு வற்புறுத்தியதைத் தொடர்ந்து, சரணடைய மறுத்த தளபதி கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகள் கப்பலைதகர்த்ததோடு தாமும் வீரச்சாவெய்தினர்.

இதேவேளை, இக்கப்பலில் பயணம் செய்த மேலும் ஒன்பது பேரை இந்திய கடற்படை கைது செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. கப்பல் தீப்பற்றி வெடித்தபோது அதிலிருந்த இவ் ஒன்பது பேரும் கடலில் பாய்ந்ததாகவும் தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளின் கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வைத்து வழிமறித்து பலவந்தமாக இழுத்து வந்ததையும், பின்னர் இந்திய பிராந்தியத்திற்குள் வைத்து, சரணடையுமாறு வற்புறுத்தியமையும் இந்தியா திட்டமிட்டு மேற்கொண்டுள்ள சதிவேலை என அறியமுடிகின்றது.

சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பலை தாக்க முற்படுவதோ, அன்றி புலிகளை கைது செய்ய முற்படுவதினாலோ எழும் சர்ச்சை இந்தியாவிற்கு எதிரான பலத்த கண்டனங்களைத் (6 ஆம் பக்கம் பார்க்க)

# தளபதிகிட்டுஎப்படி இறந்தார்?

# இந்திய அரசு தரும் விளக்கம்

[சென்னை]

விடுதலைப் புலிகளின் கப்பல் கடலில் தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கிவிட்டதாக...


இதேவேளை இந்தக் கப்பலில் இருந்த 9 விடுதலைப் புலிகள் போராளிகள் மீட்...

...யுள்ளார்.

முன்னதாக கிட்டு பயணம் செய்த கப்பலை வழிமறித்த...

# சர்வதேச அரசியல் அரங்கில்

# 9 போராளிகளும் வீரமரணம்



[யாழ்ப்பாணம்]

இந்திய அரசின் நாசகார சதிவேலை காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியான திரு. கிருஷ்ணகுமார் (கிட்டு) நேற்றுக் காலை வீரமரணம் அடைந்தார். தளபதி கிட்டுவுடன் 9 விடுதலை வேங்கைகளும் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையால் தடுக்கப்பட்ட புலிகளின் கப்பல் சென்னைக்கு சமீபமாக 12 கி மீற்றர் தூரம்வரை பலவந்தமாக கொண்டு செல்லப்பட்டது. அங்கு புலிவீரர்களை சரணடையுமாறு இந்திய கடற்படையினர் ஆயுத முனையில் நிர்ப்பந்தித்தனர். இந்தியாவிடம் சரணடைய மறுத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலைத் தகர்த்து தற்கொலை செய்து கொண்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் தளபதி கிட்டு பயணம் செய்த கப்பல் இந்திய கடற்படையினரால் சர்வதேச கடற்பரப்பில் வைத்து வழிமறிக்கப்பட்டதும் பின்னர் அது பலவந்தமாக சென்னை நோக்கி இழுத்து வரப்பட்டதும் தெரிந்ததே.

சென்னை நோக்கி அக்கப்பலை இழுத்து வந்த இந்திய கடற்படைக்கப்பல்கள் இந்திய கடற்பரப்பிற்குள் வந்ததும் கப்பலில் உள்ளவர்களைச் சரணடையுமாறு வற்புறுத்தியதைத் தொடர்ந்து, சரணடைய மறுத்த தளபதி கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகள் கப்பலைத் தகர்த்ததோடு தாமும் வீரச்சாவெய்தினர்.

இதேவேளை, இக்கப்பலில் பயணம் செய்த மேலும் ஒன்பது பேரை இந்திய கடற்படை கைது செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. கப்பல் தீப்பற்றி வெடித்தபோது அதிலிருந்த இவ் ஒன்பது பேரும் கடலில் பாய்ந்ததாகவும் தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளின் கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வைத்து வழிமறித்து பலவந்தமாக இழுத்து வந்ததையும், பின்னர் இந்திய பிராந்தியத்திற்குள் வைத்து, சரணடையுமாறு வற்புறுத்தியமையும் இந்தியா திட்டமிட்டு மேற்கொண்டுள்ள சதிவேலை என அறியமுடிகின்றது.

சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பலை தாக்க முற்படுவதோ, அன்றி புலிகளை கைது செய்ய முற்படுவதினாலோ எழும் சர்ச்சை இந்தியாவிற்கு எதிரான பலத்த கண்டனங்களைத்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தளபதிகிட்டுஎப்படி இறந்தார்? இந்திய அரசு தரும் விளக்கம்

[சென்னை]

விடுதலைப் புலிகளின் கப்பல் கடலில் தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கிவிட்டதாக இந்திய இராணுவத் துறை அறிவிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமார் [கிட்டு] வந்த M.P. ஆசாத் எனப்படும் விடுதலைப் புலிகளின் கப்பல் சென்னையிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் இருந்த போது இந்தக் கப்பலில் தீப்பிடித்ததென்றும், இந்தக் கப்பலை மீட்கத் தாம் முயற்சித்தும் பலனின்றி இக்கப்பல் மூழ்கிப்போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தக் கப்பலில் இருந்த 9 விடுதலைப் புலிகள் போராளிகள் மீட்கப்பட்டார்கள் என்றும், இந்த 9 பேரில் கிட்டு இல்லை என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கப்பலில் வந்த கிட்டுவின் கதி என்ன ஆனது என வெரித்தாஸ் செய்தியாளர் கேட்டபோது கிட்டு கப்பலில் இறந்திருக்கலாம். அதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என அவ் அதிகாரி கூறியுள்ளார்.

ஆனால் தம்மால் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 9 பேரில் புலிகளின் உயர் அதிகாரி ஜெயச்சந்திரனும் ஒருவர் என அவ் அதிகாரி கூறியுள்ளார்.

முன்னதாக கிட்டு பயணம் செய்த கப்பலை வழிமறித்த இந்தியக் கப்பற்படை அவரைச் சென்னைக்கு கொண்டு வந்து பொலிசாரிடம் ஒப்படைத்ததாக தமிழக பொலிசார் கூறியிருந்தனர், ஆனால் தமிழக பொலிசாரின் தகவல் உண்மையல்ல என இராணுவத்துறை அறிவிப்பாளர் கூறினார்.

விடுதலைப் புலிப் போராளிகள் இருபது பேர் பயணம் செய்த கப்பலை சென்னைக்குச் சமீபமாக இந்தியக் கடற்படையினர் நிறுத்தியிருந்தனர் ஆனால் அக்கப்பலுக்குள் கடற்படையினர் எவரும் பிரவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை துறைமுகத்திறுள் கப்பல் அழிக்கப்பட்டது

### புலிகளின் பாரிஸ் பேச்சாளர் அறிவிப்பு

(லண்டன்)

"திரு. கிட்டு பயணம் செய்த கப்பல் வழி மறிக்கப்பட்டு சென்னைத் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அழிக்கப்பட்டுள்ளது" என பாரிசில் இருக்கும் புலிகளின் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; "கிட்டு கப்பலைத் தகர்த்துவிடப் போவதாக எச்சரித்திருந்தார் என்று இந்திய அதிகாரிகள் முதலில் தெரிவித்திருந்தனர். பின்னர், இந்திய அதிகாரிகள் தம்மை விடுவிக்க வேண்டும் அல்லது தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக கிட்டு எச்சரித்தார் என்று செய்திகள் வெளியாகின. அதன் பின்னர் கப்பல் தகர்க்கப்பட்டதாகவும், தீப்பிடித்து எரிவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை அவதானிக்கும் போது சில உள்நோக்கங்கள்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சர்வதேச அரசியல் அரங்கில் இந்தியாவின் புரளி அம்பலம்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கிட்டு பயணம் செய்த கப்பல் கைப்பற்றப்பட்டமை அக்கப்பல் அழிக்கப்பட்டமை தொடர்பாகவும், அதில் பயணம் செய்த திரு. கிட்டு மரணமடைய நேர்ந்தது தொடர்பாகவும் இந்தியா வெளியிடும் தகவல்கள் முன்னுக்கு பின் முரணாகவும், யதார்த்தத்துக்குப் புறம்பானவையாகவும் இருப்பதாகவும் சர்வதேச அரசியல் அரங்கில் கருதப்படுவதோடு. இவ்விவகாரத்தில் இந்தியாவின் கூற்றுக்கள் ஏற்புடையவையாக இல்லை எனவும் கருதப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தளபதி கிட்டு விவகாரம் தொடர்பாக நேற்றுக் காலை தகவல் வெளியிட்ட ஓர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கிட்டு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தமிழக புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இதேவேளை திரு. கிட்டு சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால், நேற்று மாலை தளபதி கிட்டுவைத் தாம் கைது செய்யவில்லை என்றும், அவர் எரியும் கப்பலிலேயே இருந்தார் என்றும் இந்திய இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த முரண்பாடான அறிக்கைகள் இந்தியாவின் ஏமாற்று நடவடிக்கையைக் காட்டுவதாகவே அவதானிகள் கருதுகின்றார்கள். மேலும் சர்வதேச கடற்பரப்பில் வைத்து கடந்த புதன்கிழமை இரவு கைப்பற்றப்பட்ட கப்பலை, நேற்றுக்காலை இந்திய கடற்பரப்பில் வைத்து கைது செய்ததாகத் தெரிவிக்கின்றமையும் இந்தியா இந்த விவகாரத்தில் உண்மைகளை வெளியிடவில்லை என்பதையே நிரூபிப்பதாகவும் கருதப்படுகிறது.

## தமிழக பொலிஸ் செய்திக்கு பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

### கிட்டு தங்களிடம் இல்லையாம்

[கொழும்பு]

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கிட்டு அங்கு சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்ததாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன.

மேலும் ஆழ்கடலில் வைத்துக் கைதுசெய்த இந்தியக் கடற்படையினர் அவரை நேற்றுமுன்தினமிரவு சென்னைக்குக் கொண்டு சென்றனர் எனவும், தமிழ்நாடு மாநிலப் பொலிஸாரின் உளவுப் பிரிவிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார் என சென்னையிலுள்ள பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளிவந்தன. பின்னர் இதனை இந்தியப்பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மறுத்தன.

## வரி விளம்பரம்


**டில்கா வாச் வேக்ஸ்**

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, கிராஸ்வீதி, (வான வில் கபே அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5795)

**பற் சிகிச்சை நிலையம்**

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில். கே. கே. எஸ். வீதி, கொக்குவில். பா. நே. தினசரி 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு 10 மு. ப.—12 ந. ப. (3250)

**கற்பூரவல்லி**

கற்பூரவல்லி நாற்றுகள் வழங்குகிறோம் 10 பால்மா வெற்றுப்பைகள் தந்து நேரில் பெற்றுக்கொள்ளவும். மில்க்வைற் (டு/5796)


## பொது எழுதுவினைஞர்கள் பரீட்சை 30-ம்திகதி

[யாழ்ப்பாணம்]

பொது எழுதுவினைஞர் சேவை ஆட்சேர்ப்புக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 30-ம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் மற்றும் வினாத்தாள்கள் என்பன மிக விரைவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

## குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது

[வடமராட்சி]

பொலிகண்டி கிழக்கு கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் 22 ஆயிரம் ரூபா செலவில் நல்ல குடிநீர் குழாய்க் கிணறு ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நல்ல குடிநீர் இல்லாததினால் இக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டதை இட்டு ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்றன [யோ]

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் முறைசாராக் கல்விப் பிரிவிலுள்ள அகனொடிணைந்த சேவைகளிலும் பணியாற்றுவதற்கான போதனாசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது மரவேலை; மரச்சிற்பவேலை; வானொலி, தொலைக்காட்சி திருத்துதல்; மோட்டார் பொறித்தொழில்; மோட்டார் சைக்கிள், சைக்கிள் திருத்துதல்; ஆடைகள் தைத்தல்; உலோகப் பொருள் உற்பத்தி; தமிழ், ஆங்கில தட்டச்சும் சுருக்கெழுத்தும்; பிறெய்லி கல்வியூட்டல் கூடியோர்; அச்சுவேலை; மணிக்கூடு திருத்துதல்; உணவு பதனிடல்; விளம்பர சேவையாளர்; விற்பனை அபிவிருத்தியாளர்; தட்டச்சுத் திருத்துனர்; சமையற்கலை என்பன போன்ற துறைகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### நிவாரணம் விநியோகம்

(குருநகர்)

யாழ். பல நோக்குக்கூட்டுறவுச்சங்க கிளைகளில் மீனவர்களுக்கும் மேசன் தச்சுத் தொழிலாளர்களுக்குமான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் விநியோகம் நடைபெற்று வருகிறது.

மீனவர்களுக்கு மூன்றுகட்ட நிவாரணமும் மேசன் தொழிலாளர்களுக்கு ஒரு கட்ட நிவாரணமும் வழங்கப்படும் பொருள்களில் அரிசி, சீனி, மா, தீப்பெட்டிகள் ஆகியன அடங்கியுள்ளன [21]

### மூக்குக்கண்ணாடி விநியோகம்

(குருநகர்)

றெட்பானா சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ் மாவட்டத்தில் 45 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

மொத்தம் 60 மாணவர்கள் விண்ணப்பித்து இருந்ததாகவும் முதல் கட்டத்தில் 45 மாணவர்களுக்கே கண்ணாடிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சியுள்ள 15 மாணவர்களுக்கும் கண்ணாடிகள் எடுத்துவரப்பட்டதும் வழங்கப்பட இருப்பதாகவும் திட்ட இணைப்பாளர் திரு. எ. எஸ். சர்மா தெரிவித்தார். [21]

## ஜப்பானின் புலமைப் பரிசில் இவ்வாண்டுமுதல் நிறுத்தம்

## சுயமுயற்சிக் கடன் வழங்க ஏற்பாடுகள்

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும், தொழில் வாய்ப்பு இன்றி இருப்போருக்கு உதவும் பொருட்டு, இவர்களுக்கு சுயமுயற்சிக்கடன் வழங்கி தொழில் வாய்ப்பை கொடுப்பதற்கான திட்டமொன்றை தீவக பெருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர். இதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுவரும் இவர்கள் தகுதியானவர்களுக்கு விண்ணப்பதாரிகளுக்கும் சுயமுயற்சித் தொழில்களுக்கு ஏற்ப பொருள்களை அல்லது தளபாடங்களையே வழங்கவிருக்கின்றனர்.

## நிர்வாகிகள் தெரிவு

முத்தமிழ் சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் அண்மையில் சமாஜத்தலைவர் டானியல் அன்ரனி தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தலைவராக ச. நாகராசாவும் செயலாளராக க. மதியழகனும், பொருளாளராக ப. சந்திரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஆறு செயற் குழு உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர்.

★ ★ ★

ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப் பணி மன்றம் புது வருடத்திற்கான நிர்வாகிகளை அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவு செய்துள்ளது. தலைவராக சி. சிவசக்திபாலனும், செயலாளராக க. வேலானந்தனும், பொருளாளராக அ. பரமநாதனும் தெரிவாகியதுடன், பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

வெழுப்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நிலையத் தற்காலிகத் தலைவர் மு. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது அப்போது தலைவராக பொ. இராமநாதனும் செயலாளராக எஸ் பத்மநாதனும், பொருளாளராக என். ஆனந்தராசாவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எட்டுப்பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.


ஈழநாதம்

# 3-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பா


## மலையக இளைஞர் மீது மற்றுமொரு கெடுபிடி

(கொழும்பு)

கொழும்பிற்கு தொழில் வாய்ப்பைத் தேடிச் செல்லும் மலையக இளைஞர்களின் இருப்பிடத்தை உறுதி செய்யும் கடிதங்களை வழங்க தோட்ட நிர்வாகங்கள் மறுப்பு தெரிவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

அடையாள அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாத தோட்டத்தில்வேலைவாய்ப்பு பெறாத இந்த இளைஞர்கள் தங்கள் அடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கு தோட்டநிர்வாகங்களை அணுகிய போதே இவ்வாறு மறுப்பு தெரிவிக்கப்படுகிறதாம்


## நினைவு கூருகின்றோம்

### 1993-01-17

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - முழங்காவில், நாயாற்று வெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

றோஸ்மன் [பிரான்சிஸ் பீரிஸ் இருதயநேசன் பீரிஸ் - அரிப்புத்துறை, சிலாவத்துறை, முருங்கன்-மன்னார்]

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இம்முகாமிற்கு பாண் விநியோகித்து வந்தவரான தமிழ்ப் பொதுமகன். குரும்பசிட்டி, குப்பிளான், கட்டுவன் ஏழாலைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் ஏழு மணி நேரம் மேற்கொண்ட அட்டூழியங்களில் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - வாகரை, கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி, வாகரை முகாமில் வைத்துச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட -

★ கமல் [ஆறுமுகம் நல்லதம்பி - அலிஓலுவ, மூதூர் - திருக்கோணமலை]

கிளிநொச்சி - ஆனையிறவு குறிஞ்சாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜொனி [அன்பாயுதம் சீமான் - உதயநகர் மேற்கு - கிளிநொச்சி]

லெப். சதா [பொனிபாஸ் எல்விஸ்திமதி - சங்கத்தார் வயல், இயக்கச்சி, பளை - கிளிநொச்சி]

அஜித் ( — ராஜன் - கொழும்பு)

லெப். குகன் (சுப்பிரமணியம் சண்முகராசா - மந்துவில், கொடிகாமம் - யாழ்ப்பாணம்)

லெப். அர்ச்சுனா [நடராசா ஜெயபாலன் - கல்வயல், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி - யாழ்ப்பாணம்]

இதே சமரின்போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

சுமன் (இளையதம்பி ஜெயானந்தராசா - முகமாலை, எழுதுமட்டுவாழ், கொடிகாமம் -யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

அசீஸ் (நடராசா விமலேந்திரன் - செருக்கப்புலம், அம்பனை, தெல்லிப்பழை - யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - களுதாவளைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சோமன் ( — சோமசுந்தரம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு)

இதே சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

[illegible]

வழங்குகிறோம் 10 பாவ்மா வெற்றுப்பக்கற் தந்து நேரில் பெற்றுக்கொள்ளவும். மில்க் வைற் (சி/5796)

## பொது எழுதுவினைஞர்கள் பரீட்சை 30-ம்திகதி

[யாழ்ப்பாணம்]

பொது எழுதுவினைஞர் சேவை ஆட்சேர்ப்புக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 30-ம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் மற்றும் வினாத்தாள்கள் என்பன மிக விரைவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

## குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது

[வடமராட்சி]

பொலிகண்டி கிழக்கு கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் 22 ஆயிரம் ரூபா செலவில் நல்ல குடிநீர் குழாய்க் கிணறு ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நல்ல குடிநீர் இல்லாததினால் இக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டதை அடுத்து ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்றன [யோ]

(குருநகர்)

யாழ். பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கிளைகளில் மீனவர்க்கும் மேசன் தச்சுத் தொழிலாளர்களுக்குமான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் விநியோகம் நடைபெற்று வருகிறது.

மீனவர்களுக்கு மூன்றுகட்ட நிவாரணமும் மேசன் தொழிலாளர்களுக்கு ஒரு கட்ட நிவாரணமும் வழங்கப்படும் பொருள்களில் அரிசி, சீனி, மா, தீப்பெட்டிகள் ஆகியன அடங்கியுள்ளன [21]

## மூக்குக்கண்ணாடி விநியோகம்

(குருநகர்)

றெட்பானா சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ் மாவட்டத்தில் 45 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

மொத்தம் 60 மாணவர்கள் விண்ணப்பித்து இருந்ததாகவும் முதல் கட்டத்தில் 45 மாணவர்களுக்கே கண்ணாடிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சியுள்ள 15 மாணவர்களுக்கும் கண்ணாடிகள் எடுத்து வரப்பட்டதும் வழங்கப்படஇருப்பதாகவும் திட்ட இணைப்பாளர் திரு. எ. எஸ். சர்மா தெரிவித்தார். [21]

## ஜப்பானின் புலமைப் பரிசில் இவ்வாண்டுமுதல் நிறுத்தம்

சிறிலங்கா மாணவர்களுக்கு ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த புலமைப் பரிசில் இந்த வருடம் முதல் நிரந்தரமாக நிறுத்தப்பட்டு விட்டதாக ஜப்பானிய உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ளது. இதனைத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் 93 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பெற்றுச் செல்லும் மாணவ, மாணவிகளிடையே உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; கடந்த வருடத்தில் இப்புலமைப் பரிசில் வாய்ப்பைப் பெற்று ஜப்பான் சென்ற ஆறு மாணவர்களில் கண்டி, புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த இருவர் நாடு திரும்பாமல் அங்கேயே தங்கி விட்டதாகவும் அதனால் தான் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த வாய்ப்புக்கள் உடனடியாக நிறுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## நாய்க்குட்டி திருட்டு சப் இன்ஸ்பெக்டர் கைது

(காலி)

நாய்க்குட்டியைத் திருடிய சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டார் இச் சம்பவம் காலிமாவட்டத்தில் நடைபெற்றது.

இதுபற்றி தெரியவருவதாவது: காலிமாவட்டத்திலுள்ள ஆசிரியைவாசி ஒருவர் தனது நல்லரக நாய்க்குட்டியொன்று காணாமல் போய்விட்டதாக தெரிவித்த புகாரையடுத்து நாய்க் குட்டியை பொலிசார் அதே பகுதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றிலிருந்து மீட்டனர்.

இக் களவு தொடர்பாகவே சப் இன்ஸ்பெக்டர் கைதுசெய்யப்பட்டு காலி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் இவரை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவு செய்துள்ளது. தலைவ

ராகவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எட்டுப்பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# ஈழநாதம்
# 3-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும், எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு,

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - வாகரை, கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி, வாகரை முகாமில் வைத்துச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட -

★ கமல் [ஆறுமுகம் நல்லதம்பி - அலிஓலுவ, மூதூர் - திருக்கோணமலை]

கிளிநொச்சி - ஆனையிறவு குறிஞ்சாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜொனி [அன்பாயுதம் சீமான் - உதயநகர் மேற்கு - கிளிநொச்சி]

லெப். சதா [பொனிபாஸ் எல்விஸ்திமதி - சங்கத்தார் வயல், இயக்கச்சி, பளை - கிளிநொச்சி]

அஜித் ( — ராஜன் - கொழும்பு)

லெப். குகன் (சுப்பிரமணியம் சண்முகராசா - மந்துவில், கொடிகாமம் - யாழ்ப்பாணம்)

லெப். அர்ச்சுனா [நடராசா ஜெயபாலன் - கல்வயல், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி - யாழ்ப்பாணம்]

இதே சமரின்போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

சுமன் (இளையதம்பி ஜெயானந்தராசா - முகமாலை, எழுதுமட்டுவாழ், கொடிகாமம் -யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

அசீஸ் (நடராசா விமலேந்திரன் - செருக்கப்புலம், அம்பனை, தெல்லிப்பழை - யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - களுதாவளைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சோமன் ( — சோமசுந்தரம் - களுவாஞ்சிக்குடி. - மட்டக்களப்பு)

இதே சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

நிசாம் – நிச்சாட் (குழந்தைவேல் ராஜேந்திரன் - 37-ம் கிராமம், பக்கியெல்ல, களுதாவளை - 03 - மட்டக்களப்பு)

வவுனியா - மாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

ரகு (பூவிலிங்கம் தாஸ்நிதி - தாஸ்நிதி வீதி, ஊரெழு மேற்கு, சுன்னாகம் - யாழ்ப்பாணம்)

வவுனியாவில் திருமண வைபவமொன்றிற்கு சென்றுகொண்டிருக்கையில் பூந்தோட்டம் பகுதியில் வைத்துச் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ்ப்பாணம் - நெடுந்தீவு, பனங்காணிமுனை) சிறிலங்கா கடற்படைப் படையினரால் மோதிக் கொல்லப்பட்ட - கடற்றொழிலாளியான பலாலியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5792]

# கோடிக்கணக்கில் செலவிட்டும் யுத்தம் முடிவதாக இல்லை

## -கோட்டே விகாராதிபதி கவலை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்தத்திற்காக நாளாந்தம் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவிடுகிறது.

இத்தகைய நிலையைத் தவிர்க்க சகல அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து அரசியல்லாபம் கருதாத தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் எனக் கோட்டே நாகவிகாராதிபதி மாதுளுவாவே சோபிததேரோ தெரிவித்துள்ளார்.

கம்புறுப்பிட்டியாவில் கொப்பேகடுவ சிலைக்கு அத்திவாரக்கல் நாட்டும் வைபவம் உபாலி விஜயவர்த்தன மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அவாவினால் இந்த நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் ஒரு தீர்வை முன்வைக்காதது வருத்தத்திற்கு உரியது. இது யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதற்கும், அப்பாவிகளான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பலியாவதற்கும் ஏதுவாகிறது எனத் தெரிவித்தார்.

அத்துடன் எல்லோரும் ஒன்றாக இணைந்து புலிகளை நசுக்க வேண்டுமெனவும், சகலரும் இந்த நாட்டைக் காக்க முன்வர வேண்டுமெனவும் வேண்டுகோள்விடுத்தார். சமஷ்டி அமைப்பு தேவையற்றது எனவும், தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டுமெனவும், ஈழம் அரசை நிறுவ இடமளிக்கக் கூடாது எனவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

அவரைத்தொடர்ந்து உரை நிகழ்த்திய பொங்களுவே நாயக தேரோ பேசுகையில் சிங்களவீரத்தை நிலைநாட்ட முன்வர வேண்டுமெனவும், சிங்கவீரம் இல்லாமையால் தான் நாம் கிராமங்களையும் நகரங்களையும் விட்டு வெளியேற வேண்டி நேரிட்டது என்றும் குறிப்பிட்டார்.

# யுத்தம் விரைவில் வெற்றி கொள்ளப்படும்

## ஹமில்டன் வனசிங்கா

(திருகோணமலை)

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த யுத்தம் நீண்டகாலம் செல்ல முன்பே வெற்றி கொள்ளப்படும் ஒற்றுமைக்கு எதிரான சக்திகள் ஒடுக்கப்படும்" இவ்வாறு கூட்டுப்படைத் தலைமை அதிகாரி ஜெனரல் ஹமில்டன்வனசிங்கா தெரிவித்தார்.

திருக்கோணமலை கடற்படைத்தளத்தில் நடைபெற்ற புதிதாகப் பதவி ஏற்றுக் கொண்ட 28 கடற்படை அதிகாரிகள் 162 கடற்படையினர், 28 பெண் கடற்படையினரின் பதவி ஏற்பு வைபவத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; "நாடு மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளது நாட்டின் சேவைக்கு தம்மை அர்ப்பணித்துள்ள இவர்களின் பெற்றோருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்" என்றார்.

# பயிற்சி ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமனம்

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் பயிற்சியை முடித்த வேலணைக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்தஆசிரிய, ஆசிரியைகளை கடந்த 13 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக வேலணை கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் நியமனம் செய்துள்ளார்.

கணிதபாடத்தில் பயிற்சியை முடித்த ஆறு ஆசிரியர்களும், விஞ்ஞான பாடத்தில் பயிற்சியை முடித்த ஒன்பது ஆசிரியர்களும், மனையியல் பாடத்தில் பயிற்சியை முடித்த ஆறு ஆசிரியர்களும், ஆரம்பபாடநெறியில் பயிற்சியை முடித்த ஏழு ஆசிரியர்களும், றோமன் கத்தோலிக்க சமயத்தில் பயிற்சியை முடித்த இரு ஆசிரியர்களுமாக மொத்தம் முப்பது பயிற்சி ஆசிரிய, ஆசிரியைகள் இவ்வாறு வேலணைக் கோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்

இவர்களில் பெரும்பாலானோர் பயிற்சிக்கு முன்னர் கற்பித்த பாடசாலைகளிலேயே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [17]

# மாட்டுவண்டில் சேவை

[வடமராட்சி]

மாட்டு வண்டில் சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது. போக்குவரத்துச் சேவைகள் குறைவடைந்து வருவதையடுத்து மாட்டு வண்டில் சேவையே இன்று மக்களது பிரதான சேவையாக இருந்துவருகிறது.

மந்திகை, ஊறணி வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளிகள் இச்சேவைமூலம் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்றனர். (யோ)

# கரப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பாடசாலைகளுக்கிடையேயான செற்அப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமாகி உள்ளன. இடபோட்டிகளில் எட்டுப் பாடசாலைகள் கலந்து கொள்கின்றன.

யாழ் பரியோவான்கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம. மகா வித்தியாலயம், நடேஸ்வராக்கல்லூரி, சென் ஜோசப் கல்லூரி ஆகியவைகளே மேற்படி பாடசாலைகளாகும்.

இதில் நாளை நடைபெற உள்ளபோட்டிகளில்யாழ் இந்துக்கல்லூரியைஎதிர்த்து கனகரத்தினம ம. மகாவித்தியாலயமும், ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும், அத்தியார் இந்துக் கல்லூரியை எதிர்த்து சென். ஜோசப் கல்லூரியும் மோத உள்ளன. இப் போட்டிகள் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பி. ப. 3.00 மணி தொடக்கம் நடைபெற உள்ளன.

இக் கரப்பந்தாட்டப் போட்டிகள் யாவும் சுழல் முறையில் நடாத்தப்பட உள்ளதாகவும்

# கருத்தரங்கு

யாழ்ப்பணம் இந்துசமயப் பேரவை இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என்ற விடயம் பற்றி இந்து ஆலய தர்மகர்த்தாக்கள், முகாமையாளர்கள், பரிபாலன சபையினர்களுக்கான கருத்தரங்கொன்றை நடாத்தவிருக்கின்றது. இக்கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் மகாராஜஸ்ரீ. சு. து. சண்முகநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் எழுதிய "இந்துப் பண்பாட்டு மரபுகள்" என்னும் நூல் வெளியிடப்படுவதுடன் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

அனைத்து இந்து ஆலய தர்மகர்த்தாக்களையும், முகாமையாளர்களையும், பரிபாலன சபையினரையும், பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ் இந்துசமயப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மக்களுக்கான இலவச நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்கென அங்கு ஒரு கிளை விரைவில் திறக்கப்பட இருப்பதாக புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கென கிளை முகாமையாளர் உதவியாளர், சிட்டைவிகிதர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

# முத்தையன்கட்டு குளம் புனரமைப்பு

நீண்ட காலமாக திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்த முத்தையன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் கடந்த அக்டோபர் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புனரமைப்பு வேலைகளின் முதற்கட்டமாக குளத்தின் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த அணைகள் திருத்தப்பட்டுள்ளன.

# சிறுமியை மீட்க கிணற்றினுள் குதித்த பெண் காயம்

கிணற்றினுள் தவறிவீழ்ந்த தனது 6 வயதுச் சிறுமியை மீட்பதற்கு அக்கிணற்றினுள் குதித்த இளம் தாய் ஒருவர் கால்கள் பாதிப்படைந்த நிலையில், காயங்களுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 10-ம் திகதி, புலோலி தெற்கு சாரையடி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது தவறி வீழ்ந்த சிறுமி தெய்வாதீனமாக உயிருடன் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டார்.

# அரசைப் பதவியிறக்கும்வரை விடுதலை கிடையாது

## - லலித் அத்துலத்முதலி

[கொழும்பு]

மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத அரசை பதவி இறக்கும் வரை நாட்டுக்கு விடுதலை கிடையாது இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவருமானலலித்அத்துலத்முதலி பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், இன்றைய அரசு பதவியில் இருக்கும் ஒரு போதும் வடக்கு, கிழக்கு யுத்தத்தை நிறுத்தவோ வெற்றி கொள்ளவோ முடியாது. இந்த யுத்தத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 1045 வரையிலானபடையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் 1980-88வரையிலான எட்டு வருடத்தில் 878 படையினர்தான் கொல்லப்பட்டனர். வடமராட்சி யுத்தத்தில் 29 படையினர் கொல்லப்பட்டிருந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஊழல் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் அதிலிருந்து விடுபட வேண்டுமானால் ஆட்சியாளர்களைப்பதவியிலிருந்து இறக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# விபரம் சேகரிப்பு

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் கைவிடப்பட்ட பொருள்கள் பற்றி இராணுவ அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக பிரஸ்தாப சங்கங்களின் கிளைகளிருந்து கைவிடப்பட்டு வந்த பொருள்களின் விபரம், தொகை, பெறுமதி என்பவற்றை செயலாளர் புனர்வாழ்வுப்பிரிவு திட்டப்பணிப்பாளர் கோருவதாகவும் தனக்கூடாக மேற்படி விபரங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) திரு செலிங் நாதன் அவர்கள் தீவக பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (22)

# போருட்உதவியது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையையடுத்து வெற்றிலைக்கேணி, ஆழியவளை பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த அகதி மாணவர்களுக்கென வடமராட்சி போரு - நிறுவனம் பாடசாலை தளபாடங்களை வழங்கியுள்ளது (யோ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவிவெற்றிடம்- ஆங்கிலப்போதனாசிரியர் தரம் 11

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11 பதவிக்காக செய்திப்பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்திற்கு மேலதிகமாக, இப்பதவிக்கான சம்பளஅளவுத் திட்டம் மாதமொன்றுக்கு 3500 - 10 X 100 - 4500/- ரூபா ஆகும். 3500/- ரூபா நிலையான சம்பளம், அல்ல.

பதிவாளர்

(சி/5794)

09. 01. 1993 வெளிவந்த

(திருகோணமலை)

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த யுத்தம் நீண்ட காலம் செல்ல முன்பே வெற்றி கொள்ளப்படும் ஒற்றுமைக்கு எதிரான சக்திகள் ஒடுக்கப் படும்'' இவ்வாறு கூட்டுப்படை தலைமை அதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

திருக்கோணமலை கடற் படைத்தளத்தில் நடைபெற்ற புதிதாகப் பதவி ஏற்றுக் கொண்ட 28 கடற்படை அதிகாரிகள் 162 கடற்படையினர், 28 பெண் கடற்படையினரின் பதவி ஏற்பு வைபவத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; ''நாடு மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளது நாட்டின் சேவைக்கு தம்மை அர்ப்பணித்துள்ள இவர்களின் பெற்றோருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்'' என்றார்.

# பயிற்சி ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமனம்

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை முடித்த வேலணைக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரிய, ஆசிரியைகளை கடந்த 13 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக வேலணை கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் நியமனம் செய்துள்ளார்.

கணிதபாடத்தில் பயிற்சியை முடித்த ஆறு ஆசிரியர்களும், விஞ்ஞான பாடத்தில் பயிற்சியை முடித்த ஒன்பது ஆசிரியர்களும், மனையியல் பாடத்தில் பயிற்சியை முடித்த ஆறு ஆசிரியர்களும், ஆரம்பபாட நெறியில் பயிற்சியை முடித்த ஏழு ஆசிரியர்களும், றோமன் கத்தோலிக்க சமயத்தில் பயிற்சியை முடித்த இரு ஆசிரியர்களுமாக மொத்தம் முப்பது பயிற்சி ஆசிரிய, ஆசிரியைகள் இவ்வாறு வேலணைக் கோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்

இவர்களில் பெரும்பாலானோர் பயிற்சிக்கு முன்னர் கற்பித்த பாடசாலைகளிலேயே மீண்டும் நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [17]

## மாட்டுவண்டில் சேவை

[வடமராட்சி]

மாட்டு வண்டில் சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது. போக்குவரத்துச் சேவைகள் குறைவடைந்து வருவதையடுத்து மாட்டு வண்டில் சேவையே இன்று மக்களது பிரதான சேவையாக இருந்துவருகிறது.

மந்திகை, ஊறணி வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளிகள் இச்சேவைமூலம் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்றனர். (யோ)

# இராணுவ ஜீப் மோதி ஊர்காவற்படை பலி

(கொழும்பு)

இராணுவ ஜீப்பினால் மோதுண்ட ஊர்காவல்படையைச் சேர்ந்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் ஏனைய இருவர் படுகாயம் அடைந்த நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பொல்பெதிகம பகுதியில் நடைபெற்ற இந்த விபத்தில் பலியானவர் மீகலேவைச் சேர்ந்த ஊர்காவற்படையினரான முதியான்சலாகே ஜயவர்த்தனா என இனம் காணப்பட்டுள்ளார்.

இராணுவ ஜீப் வண்டி விபத்து நடந்தபோது தரிக்காமல் சென்று விட்டதால் அதனைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

## வெளிநாட்டு தபால் கட்டணம் மாற்றம்

(கொழும்பு)

வெளிநாட்டு விமான, கப்பல் தபால் கட்டணங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இம்மாற்றங்கள் சகல தபால் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.

# கோட்டை ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

வவுனியாவிற்கு செல்வதற்கென கோட்டை ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் புறக் கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

காளிராசா விக்கினேஸ்வரன் [வயது 24] என்னும் இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

...வேண்டி நோட்டீஸ் என்றும் குறிப்பிட்டார்.

## கரப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பாடசாலைகளுக்கிடையேயான செற்அப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமாகி உள்ளன. இப்போட்டிகளில் எட்டுப் பாடசாலைகள் கலந்து கொள்கின்றன.

யாழ் பரியோவான்கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம. மகா வித்தியாலயம், நடேஸ்வராக்கல்லூரி, சென் ஜோசப் கல்லூரி ஆகியவைகளே மேற்படி பாடசாலைகளாகும்.

இதில் நாளை நடைபெற உள்ளபோட்டிகளில்யாழ் இந்துக்கல்லூரியைஎதிர்த்து கனகரத்தினம ம. மகாவித்தியாலயமும், ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும், அத்தியார் இந்துக் கல்லூரியை எதிர்த்து சென். ஜோசப் கல்லூரியும் மோதஉள்ளன. இப் போட்டிகள் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பி.ப. 3.00 மணி தொடக்கம் நடைபெற உள்ளன.

இக் கரப்பந்தாட்டப் போட்டிகள் யாவும் சுழல் முறையில் நடாத்தப்பட உள்ளதாகவும் அதிக புள்ளிகள் பெறும் முதல் இரண்டு கோஷ்டிகளும் இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் எனவும் இரண்டிற்குமேற்பட்ட கோஷ்டிகள் சமமாக புள்ளிகளைப் பெறும் பட்சத்தில் விலகல் முறையில் போட்டிகள் நடாத்தி இரு கோஷ்டிகள் தகுதி காணப்படும் எனவும் மேற்படி போட்டிகள் 5. 2. 93 வரை நடைபெற உள்ளதாகவும் பாடசாலைகளுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டி ஒன்று தற்போதுதான் முதல் தடவையாக யாழ் நகரில் நடாத்தப் படுவதாகவும் யாழ் கரப்பந்தாட்டச் சங்கத்தலைவர் கப்டன் பீ ஏ. எம். குணசிங்கம் அவர்கள் தெரிவித்தார். [17]

## பொதுக்கூட்டம்

கொக்குவில் இந்துமயான அபிவிருத்திச்சபை வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கொக்குவில் பொது நூலக மேல் மாடியில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

...வை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கெருடாவில் பண்டிதர் குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மக்களுக்கான இலவச நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்கென அங்கு ஒரு கிளை விரைவில் திறக்கப்பட இருப்பதாக புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கென கிளை முகாமையாளர் உதவியாளர், சிட்டைவிகிதர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## முத்தையன்கட்டு குளம் புனரமைப்பு

நீண்ட காலமாக திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்த முத்தையன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் கடந்த அக்டோபர் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புனரமைப்பு வேலைகளின் முதற்கட்டமாக குளத்தின் மோசமாகப் பாதிக்கப் பட்டிருந்த அணைகள் திருத்தப்பட்டுள்ளன.

...நிறுத்தவோ வெற்றி கொள்ள

## விபரம் சேகரிப்பு

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் கைவிடப்பட்ட பொருள்கள் பற்றி இராணுவ அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக பிரஸ்தாப சங்கங்களின் கிளைகளிருந்து கைவிடப்பட்டு வந்த பொருள்களின் விபரம், தொகை, பெறுமதி என்பவற்றை செயலக புனர்வாழ்வுப்பிரிவு திட்டப்பணிப்பாளர் கோருவதாகவும் தனக்கூடாக மேற்படி விபரங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) திரு செலிங்நாதன் அவர்கள் தீவக பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (22)

## பொருட்உதவியது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையையடுத்து வெற்றிலைக் கேணி, ஆழியவளை பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த அகதி மாணவர்களுக்கென வடமராட்சி பொரு - நிறுவனம் பாடசாலை தளபாடங்களை வழங்கியுள்ளது (யோ)

...சியாளர்களைப்பதவியிலிருந்து இறக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பதவிவெற்றிடம்- ஆங்கிலப்போதனாசிரியர் தரம் 11**

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11 பதவிக்காக செய்திப்பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்திற்கு மேலதிகமாக, இப்பதவிக்கான சம்பளஅளவுத் திட்டம் மாதமொன்றுக்கு 3500 - 10 X 100 - 4500/- ரூபா ஆகும். 3500/- ரூபா நிலையான சம்பளம், அல்ல.

பதிவாளர்

(சி/5794)


## 09. 01. 1993 வெளிவந்த மாவீரர் உருவப் படங்கள்

| இல. | இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | முகவரி |
|---|---|---|---|
| 01. | வீ. வே. றோம் | செல்லையா-ஜெகநாதன் | சாவகச்சேரி |
| 02. | வீ வே. ரவி | தம்பையா-வாமதேவன் | மட்டக்களப்பு. |
| 03. | வீ வே. அன்சார் | நிக்கலஸ் மைக்கல் குரூஸ் | மன்னார். |
| 04. | வீ. வே. ரமேஸ் | பாலசுப்பிரமணியம்-செல்வராசா | கரவெட்டி |
| 05. | வீ. வே சின்னசிவா | கந்தையா-சிவானந்தன் | சுழிபுரம் |
| 06. | வீ. வே. சிவா | சிவசுப்பிரமணியம்-சிவகுமாரன் | வடுக்கோட்டை |
| 07. | வீ. வே. பயூரன் | குணசிங்கராசா-துவாகரன் | சாவகச்சேரி. |
| 08. | வீ. வே நிமால் | கந்தையா-ஜெயந்தன் | பருத்தித்துறை. |
| 09. | வீ வே. புத்தூர்மாமா | தாமு-கந்தையா | யாழ்ப்பாணம். |
| 10. | வீ. வே. மகான் | கதிரவேலு-செல்வராசா | வல்வெட்டித்துறை |
| 11. | வீ. வே. காந்தரூபன் | பொன்னையா-சந்திரகுமார் | கல்லடி. மட்டு. |
| 12. | வீ. வே. தவம் | நடேசு-தவராசா | ஆவரங்கால். |
| 13. | வீ. வே. கேசவன் | நல்லையா-அருள்நேசன் | வண்ணாங்கேணி. |
| 14. | வீ. வே. கோபி | மகாதேவன்-இளங்கோ | பருத்தித்துறை. |
| 15. | வீ. வே ஜெராட் | கார்த்திகேசு-இராசலிங்கம் | மன்னார். |
| 16. | வீ. வே. குலம் | வீரக்குட்டி-சந்திரமோகன் | மட்டு. |
| 17. | வீ வே. புவி | தர்மரட்ணம்-புவீந்திரன் | சுழிபுரம். |
| 18. | 2-ம் லெப். வெள்ளை | பேனாட்-எட்வேட் ஸ்ரக் | மட்டு. |
| 19. | வீ. வே. அன்பு | மூத்ததம்பி-தனபாலசிங்கம் | வெற்றிலைக்கேணி. |
| 20 | லெப். ஜோன்சன் | ஜானைதீன் | மட்டு. |
| 21. | வீ. வே. ஸரீபன் | நடராசா- ஆனந்தராசா | அனலைதீவு |
| 22. | வீ. வே. சதீஸ் | சின்னப்பு-சத்திவேஸ்வரன் | அச்சுவேலி தெற்கு. |
| 23. | வீ. வே. வாசன் | ஐயம்பிள்ளை-மணிவாசகம் | நெடுந்தீவு. |

இம் மாவீரர் உருவப்படங்கள் தமிழீழ மாவீரர் பணிமனையிலும், மாவட்ட அரசியல் துறையிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

## அலிஸ்ரன் சனசமூக நிலையத்தினர்
நடாத்தும் வடமாகாண ரீதியான

# மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி

ஆரம்பம்: 22-01-1993 வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு
இடம்: நாகம்மாள் கோயில் வீதி, உடுவில் சுன்னாகம்

**விளையாட்டுப் பிரிவுகள் A. B**

பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் தொடர்புகொள்ள வேண்டியது;
அலிஸ்ரன் சனசமூக நிலையம்
விளையாட்டுத் தலைவர்
நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில், சுன்னாகம். [சி-5797]

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்
நடாத்தும்

## 2 ஆவது வதிவிட

# வேளாண்மைப் போட்டி 1992/1993

## யாழ்மாவட்டம்

01. தமிழீழ விடுதலைப்போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம்மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச்செய்து எமது சொந்தமண்ணில் சொந்தக்காலில் தங்கிநிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக்கட்டி எழுப்புவதற்கு வழி வகுததுள்ளது.

இப்பணியில் செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தமிழீழ மக்கள் அனைவருக்குமே இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் தமக்குத் தேவையான உணவை எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தாமே உற்பத்தி செய்யவேண்டும்" என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டை அண்டிய பகுதியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடவேண்டும் எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1992/93 காலப்பகுதியில் யாழ்குடா நாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமதுவீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

02. போட்டிக்கான நிபந்தனைகளும், புள்ளிகளும்

(1) வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச்செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல். ( 5 புள்ளி)

(2) 10' நீளம் 3' அகலமும் ஆன பாத்திகளில் மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், பயிற்றங்காய், கத்தரி, புடோல், பாகற்காய், பீர்க்கங்காய், சோயா, பீர்றூட், கரட், போஞ்சி, அவரை இனம், இவற்றுள் குறைந்தது ஐந்து (5) வகைபயிர் இனங்கள் இருத்தல் வேண்டும். ( 15 புள்ளி)

(3) 10' நீளமும் 3' அகலமுமான பாத்திகளில் இலைக்கறி பயிர்களான பொன்னாங்காணி, கீரை, பசளி, கங்குங்கீரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தவசி முருங்கை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு உருவப்படம் ஒன்றினை மை தீட்டித் தருவதற்குப் பின்வரும் முற்தேவை விபரங்களுடன் குறிப்பாக

**ஓவியர்களிடமிருந்து**
**விண்ணப்பங்கள்**
**கோரப்படுகின்றன**

முழுப்பெயர்:
தொழில் புரியும்
முகவரி:

முன்னைய அனுபவம்:

தங்கள் அனுபவத்தை பார்வையிடக்கூடியவசதி:

மேற்குறிப்பிட்ட முற்தேவைகள் திருப்திசெய்து எம்மால் அங்கீகரிக்கப் படும்விண்ணப்பதாரியிடம் மட்டுமே கேள்விப்பத்திரம் அழைக்கப்படும். மேற்கூறப்பட்ட விபரங்களை

'நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம்'

என்ற முகவரிக்கு 1993 - 01 - 22-ம் திகதி அன்று காலை 10 00 மணிக்கு அல்லது அதற்குமுன்பாகவோ தபால் மூலம் அல்லது நேரடியாகச்சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஓவியம் மை தீட்டல்' எனக் குறிப்பிடடிருத்தல் வேண்டும்.

\- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
(சி-5791)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை சுமன்
## (இளையதம்பி ஜெயானந்தராசா)

17-01-1987 அன்று ஆனையிறவு சிறிலங்காஇராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை சுமன்.

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 13-03-1970 | 17-01-1987 |

ஆண்டு ஆறு ஆனபின்னும்
ஆறவில்லை எம் துயரம்
மாண்டு விட்ட மாவீரா
மறக்கவில்லை நாம் உன்னை
மீண்டும் இங்கு பிறந்து நீ வா
மேன்மையுடன் தமிழீழம்
தோன்றுகையில் ஆனந்தா நீ
தோழருடன் கூடி நிற்பாய்!

முகமாலை,
எழுதுமட்டுவாழ். தாய், தந்தை, சகோதரர்,
மாமன் குடும்பத்தினர்.
[4007)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கொடிகாமம்

# பொது முகாமையாளர் பதவி

## சம்பள அளவுத்திட்டம் - 101 (07)

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் 31-01-1993ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை தலைவர். தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர் 101 (7)

(1) சம்பளம் :- 1105 - 60x4 - 75x11 - 2170

# வேளாண்மைப் போட்டி 1992/1993

## யாழ்மாவட்டம்

01. தமிழீழ விடுதலைப்போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம்மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச்செய்து எமது சொந்தமண்ணில் சொந்தக்கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக்கட்டி எழுப்புவதற்கு வழி வகுததுள்ளது.

இப்பணியில் செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தமிழீழ மக்கள் அனைவருக்குமே இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் தமக்குத் தேவையான உணவை எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தாமே உற்பத்தி செய்யவேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டை அண்டிய பகுதியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடவேண்டும் எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1992/93 காலப்பகுதியில் யாழ்குடா நாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமதுவீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

02. போட்டிக்கான நிபந்தனைகளும் புள்ளிகளும்

(1) வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச்செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல். (5 புள்ளி)

(2) 10' நீளம் 3' அகலமும் ஆன பாத்திகளில் மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், பயிற்றங்காய், கத்தரி, புடோல், பாகற்காய், பீர்க்கங்காய், சோயா, பீற்றூட், கரட், போஞ்சி, அவரை இனம், இவற்றுள் குறைந்தது ஐந்து (5) வகைபயிர் இனங்களை இருத்தல் வேண்டும். (15 புள்ளி)

(3) 10' நீளமும் 3' அகலமுமான பாத்திகளில் இலைக்கறி பயிர்களான பொன்னாங்காணி, கீரை, பசளி, கங்குங்கீரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தவசி முருங்கை ஆகியவற்றில் ஒருமரமாவது இருத்தல் வேண்டும். (5 புள்ளி)

(4) பழமரங்களான பப்பாசி, வாழை, மா, கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். [8 புள்ளி]

(5) மஞ்சள், சீரகம், மல்லி, தூதுவளை, முசுட்டை, குறிஞ்சா, கற்பூரவள்ளி, கறிவேப்பிலை, தும்பை, இஞ்சி போன்றவற்றுள் குறைந்து ஐந்து வகைகள் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும். [5 புள்ளி]

(6) பயனுள்ள மரங்களில் பனை இரண்டு, தென்னை இரண்டு, கமுகு இரண்டு, இப்பல் இப்பில் 10 ஆகியவற்றுள் இரண்டு இனங்கள் 01-11-92 இன் பின் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும். (5 புள்ளி)

(7) கூட்டெருத்தயாரித்தல் (7 புள்ளி)

(8) தேனீ வளர்த்தல் (7 புள்ளி)

(9) கோழிவளர்த்தல் [7 புள்ளி]
[கோழி 10 1½ 5 கூடமைப்பு-2]

[10] தாரா குறைந்தது ஒரு சோடி வளர்த்தல் [4 புள்ளி]

[11] நல்லினப்பசுமாடு குறைந்தது (1) ஒன்று வளர்த்தல் (7 புள்ளி)
பசு -1 5 5 பராமரிப்பு 2 )

[12] நல்லின ஆடு குறைந்தது [1] ஒன்று வளர்த்தல் (6 புள்ளி)
ஆடு 1 3 பராமரிப்பு - 3 )

[13] முயல் குறைந்தது ஒரு சோடி வளர்த்தல் (4 புள்ளி)

[14] விலங்கு தீனியான புல்லினம், இப்பில் இப்பில், முள்முருங்கை, சீமைக் கிளுவை என்பன இருத்தல் [15 புள்ளி]

குறிப்பு: விண்ணப்பங்கள் யாவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் யாழ் மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகம், வட்ட இணைப்பாளர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு நேரடியாகவோ, கடிதமூலமாகவோ 30-01-1993 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடிய முறையில் அனுப்பிவைக்கவும். விண்ணப்பப்படிவங்களை த. பொ. மே. கழக மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகம், வட்ட இணைப்பாளர் அலுவலகங்களில் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றது.

[சி-5787]

---

குறிப்பிட்ட விபரங்களை
'நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம்'
என்ற முகவரிக்கு 1993 - 01 - 22-ம் திகதி அன்று காலை 10 00 மணிக்கு அல்லது அதற்குமுன்பாகவோ தபால் மூலம் அல்லது நேரடியாகச்சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஓவியம் மை திட்டல்' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
(சி-5791)

---

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 13-03-1970 | 17-01-1987 |

ஆண்டு ஆறு ஆனபின்னும்
ஆறவில்லை எம் துயரம்
மாண்டு விட்ட மாவீரா
மறக்கவில்லை நாம் உன்னை
மீண்டும் இங்கு பிறந்து நீ வா
மேன்மையுடன் தமிழீழம்
தோன்றுகையில் ஆனந்தா நீ
தோழருடன் கூடி நிற்பாய்!

முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

தாய், தந்தை, சகோதரர்,
மாமன் குடும்பத்தினர்.
(4007)

---

### தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### கொடிகாமம்

# பொது முகாமையாளர் பதவி

## சம்பள அளவுத்திட்டம் - 101 (07)

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் 31-01-1993ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை தலைவர், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### பொது முகாமையாளர் 101 (7)

(1) சம்பளம் :- 1105 - 60x4 - 75x11 - 2170
அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

(2) வயது :- 31-01-1993ஆம் திகதி 23 வயதுக்கு குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்.
(பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

(3) தகைமை:- [அ] கூட்டுறவு பணியாளராக 3 வருட அனுபவமுள்ள 8ஆவது சம்பளம் பெறுகின்ற முகாமைப் பதவி வகிப்பவர் அல்லது இதே சம்பளத்தில் மேற்பார்வை செய்யும் பொருத்தமான உத்தியோகத்தர், அல்லது 6 வருட அனுபவமுள்ள 9ஆவது சம்பளத்தில் பதவி வகிக்கின்ற மேற்குறிப்பிட்ட பதவியிலுள்ளவர்கள்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவரும் அல்லது அதற்குச் சமனான தகைமை பெற்றவரும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமைமட்ட பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள்.

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பயிற்சி [உயர்தரம்] 3 பாடங்களுடன் க. பொ. த [உயர்தரம்] சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமைமட்ட பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவர்கள்.

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.
15-01-1993

இ. அ. ஆனந்தராசா
தலைவர்.

[சி-5790]

### சிந்தனைக்கு

சட்டங்கள் சிலந்திக் கூடுகள் போன்றவை. சிறிய ஈக்கள் சிக்கிக் கொள்ளும், பெரிய ஈக்கள் தப்பிவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

— பிரான்சிஸ் பேக்கன்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2339 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## இந்தியாவின் அத்துமீறிய செயல்

இந்தியாவின் தென் கிழக்குக் கரையோரத்தில் இருந்து சுமார் 450 மைல்களுக்கு அப்பால், விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) பயணம் செய்த படகை இந்தியக் கடற்படை வழிமடக்கி சென்னை கொண்டு சென்றுள்ளது. தென் கிழக்காசிய நாடொன்றின் தலைநகரில் இருந்து கடல்மார்க்கமாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கையிலேயே சர்வதேசக் கடற்பரப்பில் திரு. கிட்டுவின் படகு வழிமறிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காணும் முகமாக ஐரோப்பிய நாடுகள் சிலவும், சர்வதேச அமைப்புக்கள் சிலவும் முன்வைத்த யோசனைகள் தொடர்பாக தலைமைப் பீடத்துடன் பேச்சுக்கள் நடத்த பயணம் மேற்கொண்டிருந்தபோதே திரு. கிட்டு வழிமறிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

திரு. கிட்டுவை இந்தியக் கடற்படை வழிமறித்த சம்பவம் ஒரு தற்செயலான சம்பவமா? அல்லது இந்தியக் கடற்படை விடுதலைப் புலிகளுக்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கையா என்பது குறித்து இந்திய தரப்பில் இருந்து எதுவித தகவலும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சிலவேளை இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கையில், இவ் விடயம் தொடர்பான அறிக்கையையும், முடிவையும் அறிவித்திருக்கக் கூடும். இந்தியாவின் இவ் அறிவிப்பானது திட்டவட்டமாக இனப்பிரச்சினையில், இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும்.

ஆனால், இந்தியாவின் அறிவிப்பானது எவ்வாறாக இருப்பினும், சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருக்கும் ஒரு படகை கைப்பற்றும் உரிமை இந்தியக் கடற்படைக்கு கிடையாது. சர்வதேச விதிகளின் பிரகாரம் ஒரு நாட்டின் கடல் எல்லை 200 மைல் மட்டுமே. இது இந்தியாவிற்கும் பொருந்தும். இந்நிலையில் 450 மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த ஒரு படகை இந்தியக் கடற்படை கைப்பற்றியதானது இந்தியாவின் அத்துமீறிய போக்கையே வெளிக்காட்டுகின்றது.

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம் ஒன்றில் சர்வதேச சட்டத்தை மீறிய குற்றச்சாட்

# பம்பாய் கலவரங்கள் பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும்

### - மாநில அரசுக்கு பிரதமர் தெரிவிப்பு

(டில்லி)

பம்பாயில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள் பற்றி விசாரிக்க மகாராஷ்டிரா மாநில அரசு நீதி விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் யோசனை கூறியுள்ளார்.

கலவரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிடுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்கவும் பம்பாய்க்கு விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பம்பாய் ராஜ்பவனில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியபோதே இந்த யோசனையை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறுகையில்; இத்தகைய விசாரணைக்கு மத்திய புலனாய்வுக்குழுக்கள் உதவிபுரியும் எனவும் குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக குறிப்பாகக் கலவரத்தால்விதவைகளாக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்காக பிரதமரின் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபா மாநில அரசுக்கு ஒதுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் பம்பாய் நகரிலிருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதை மாநில அரசு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொடர்ந்தும் இனங்களிடையே குரோத உணர்வு தூண்டப்பட்டால் இந்தியா பிளவுபடுவதை தவிர்க்க முடியாமற் போய்விடும் என்ற எச்சரிக்கையையும் பிரதமர் இங்கு தெரிவித்தார்.

இதேவேளை பம்பாய் சென்ற பிரதமர் நரசிம்மராவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரை நேரில் சென்று சந்தித்ததாகவும், பிரதமர் நரசிம்மராவை எதிர்த்துக் கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் ஏஜென்சிகள் செய்தி வெளியிட்டுள்ளன. அண்மையில் பம்பாயில் ஏற்பட்ட கலவரங்களையடுத்து அறுநூறுக்கும் மேலானவர்கள் கொலையுண்டதும், அங்கு இராணுவ அணிகள் அனுப்பப்பட்டதும் தெரிந்ததே.

## மேலும் மூவர் பலி

[டில்லி]

குஜராத்மாநிலத்தில்பாரூஸ் நகரில் நேற்று முன்தினம் காலை மீண்டும் மூண்ட கலவரத்தில் மூவர் கொல்லப்பட்டதாகவும் மூவர்படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இப்பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனினும் கத்திக் குத்து மற்றும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் என்பனவும் இடம் பெற்றுள்ளது.

## மகாராஷ்டிரா, குஜராத் அரசுகள் கலைக்கப்படல் வேண்டும்

### -டாக்டர் முரளி மனோகர்ஜோஷி

(டில்லி)

சட்டம், ஒழுங்கு என்பதைப் பேணுவதில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் அரசுகள் தவறிவிட்டதால் அவையும் கலைக்கப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் செயற்குழுக்கூட்டம்புதுடில்லியில் நடைபெற்ற பின்னர் செய்தியாளரிடம் பேசிய டாக்டர் ஜோஷி மேலும் கூறுகையில்; அண்மையில் கலைக்கப்பட்ட உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம், மத்திய பிரதேச மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கான தேர்தல்கள் எப்போது நடத்தப்படும் என்பதை பெப்ரவரி 25ஆம் திகதிக்கு முன்னதாக அறிவிக்க வேண்டுமெனவும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.

## குடியரசு தின வைபவங்களை புறக்கணிக்கக் கோரிக்கை

### பாபர் மசூதி செயற்கமிட்டி

(டில்லி)

அயோத்தியாவில் சரித்திரப் பிரசித்தி பெற்றதும், சர்ச்சைக்குரியதாக விளங்கியதுமான பாபர் மசூதி வளாகம் தகர்க்கப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக ஜனவரி 26-ம் திகதி வரும் இந்திய குடியரசுத் தினத்தை எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென அகில இந்திய பாபர் மசூதி செயற் கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தக் குடியரசுத் தினக் கொண்டாட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டுமெனவும், எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனவும் பாபர் மசூதி செயற் கமிட்டி இந்திய முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை பாபர் மசூதி செயற் கமிட்டியின் வேண்டுகோள் வகுப்பு வாத சக்திகளுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டுவதாகும் என்று முன்னாள் மத்திய அமைச்சரும், ஜனதாதள் தலைவருமான முப்தி முகமது சையத் கூறியுள்ளார்.

## அயோத்தி சம்பவங்களுக்கும் கலவரத்திற்கும் தொடர்பில்லை

### - பிரதமர் நரசிம்மராவ்

[டில்லி]

அண்மையில் பம்பாயில் இடம்பெற்ற கலவரங்களுக்கும், டிசம்பர் ஆறாம் திகதியன்று அயோத்தியாவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

பம்பாய் ராஜ்பவனில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்துப் பேசிய பிரதமர் ராவ் மேலும் கூறுகையில்; சமூக விரோத சக்திகளும், சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் கும்பல்கள் சிலவும் தமது ஒரே நோக்கங்களை அடைவதற்காக எடுத்த முயற்சிகள் தான் பம்பாய் கலவரங்கள் என்றும் வர்ணித்தார்.

## தமிழக ஆளுநரிடம் கொடுத்த சுவாமியின் மகஜரின் நிலை என்ன?

### -- உச்சநீதிமன்றம் கேள்வி

(டில்லி)

ஜனதாக் கட்சியின் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியினால் தமிழகஆளுநரிடம்சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி ஆராயுமாறு இந்திய உச்சநீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

தனிப்பட்ட புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றை முதல்வர் ஜெயலலிதா நடத்தி வருகின்றார் என்பதால் அவர் சட்டப் பேரவை உறுப்பினர் பதவி வகிக்கவும், முதலமைச்சராக தொடர்ந்து நீடிக்கவும் தகுதியற்றவர் என்பதைச் சுட்டிக்காட்டி டாக்டர் சுப்பிரமணியம்சுவாமிஆளுநரிடம் மகஜர் ஒன்றைக்கொடுத்திருந்தது தெரிந்ததே.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இதே போன்ற மகஜர்களை இந்திய குடியரசுத் தலைவரிடம் கொடுத்திருந்தது மட்டுமன்றி உச்ச நீதிமன்றத்திலும் மனுதாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பீஷ்ம நாராயண்சிங்

## தமிழக ஆளுநர் பதவியை துறந்து தான் ஆகவேண்டும்

### மு. கருணாநிதி

[சென்னை]

கௌரவர் பக்கம் இருக்கும் கவர்னர் பீஷ்மநாராயண் சிங் பதவி விலகல் என்னும் அம்புப் படுக்கையில் படுத்தே தீர வேண்டும் என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது: ராஜீவ் கொலை வழக்கில் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ... உள்ள குற்றத்தையும் செய்துள்ளது.

அதனால் தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தருவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அரசுக்கு அறிவித்தது.

பல்வேறு கட்சிகள் கூட்டாக சேர்ந்து, பீஷ்மநாராயண்சிங் பதவி விலக வேண்டும் என

நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியருக்கு

## உணவு மற்றும் மருந்து எடுத்துச்செல்ல இஸ்ரேல் அனுமதி

(சதாசிவம் கிருஷ்ணகுமார்) பயணம் செய்த படகை இந்தியக் கடற்படை வழிமடக்கி சென்னை கொண்டு சென்றுள்ளது. தென்கிழக்காசிய நாடொன்றின் தலைநகரில் இருந்து கடல்மார்க்கமாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கையிலேயே சர்வதேசக் கடற்பரப்பில் திரு. கிட்டுவின் படகு வழிமறிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காணும் முகமாக ஐரோப்பிய நாடுகள் சிலவும், சர்வதேச அமைப்புக்கள் சிலவும் முன்வைத்த யோசனைகள் தொடர்பாக தலைமைப் பீடத்துடன் பேச்சுக்கள் நடத்த பயணம் மேற்கொண்டிருந்தபோதே திரு. கிட்டு வழிமறிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

திரு. கிட்டுவை இந்தியக் கடற்படை வழிமறித்த சம்பவம் ஒரு தற்செயலான சம்பவமா? அல்லது இந்தியக் கடற்படை விடுதலைப் புலிகளுக்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கையா என்பது குறித்து இந்திய தரப்பில் இருந்து எதுவித தகவலும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சிலவேளை இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கையில், இவ்விடயம் தொடர்பான அறிக்கையையும், முடிவையும் அறிவித்திருக்கக் கூடும். இந்தியாவின் இவ் அறிவிப்பானது திட்டவட்டமாக இனப்பிரச்சினையில், இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும்.

ஆனால், இந்தியாவின் அறிவிப்பானது எவ்வாறாக இருப்பினும், சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருக்கும் ஒரு படகை கைப்பற்றும் உரிமை இந்தியக் கடற்படைக்கு கிடையாது. சர்வதேச விதிகளின் பிரகாரம் ஒரு நாட்டின் கடல் எல்லை ௨00 மைல் மட்டுமே. இது இந்தியாவிற்கும் பொருந்தும். இந்நிலையில் 450 மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த ஒரு படகை இந்தியக் கடற்படை கைப்பற்றியதானது இந்தியாவின் அத்துமீறிய போக்கையே வெளிக்காட்டுகின்றது.

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம் ஒன்றில் சர்வதேச சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் சுமார் பத்து வருடங்களாக பதவியில் இருந்த டென்மார்க் பிரதமர் தமது பதவியைத் துறந்துள்ள இவ்வேளையில், இந்தியா சர்வதேச சட்டங்களைத் துச்சமாக மீறி தமது கடற்பரப்பிலிருந்து சுமார் 250 மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த படகைக் கைப்பற்றியமை பெரும் அடாவடித்தனமாகும்.

இதேவேளை இந்தியாவின் இந்நடவடிக்கையானது தென்னாசியப் பிராந்தியத்திலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் தனது பொலிஸ்காரத்தனத்தையும், ஆதிக்கத்தையும் காட்டும் நடவடிக்கை என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை இது தனியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என தென்னாசியாவில் சிறிலங்கா போன்ற அரசுகள் திருப்தி அடையலாம். ஆனால், இது இந்திய ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதி என்பதை அவர்களும் மறந்து விடக்கூடாது.

அதாவது, சர்வதேச விதிமுறைகளை மீறுவதான இந்தியா மேற்கொண்ட இந்நடவடிக்கையானது பலத்த ஆட்சேபத்திற்கும், கண்டனத்திற்குரியது. அத்தோடு இலங்கை விவகாரத்தில் மீண்டும் ஒருவகையான இராணுவத் தலையீட்டிற்கு இது ஒப்பானதாகும். இந்தியாவின் இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்களை மீண்டும் நேரடியாகப் பாதிக்கக் கூடியதொன்றாகும். இந்திய-தமிழர்கள் உறவில் மீண்டும் ஓர் எல்லையைத் தொடும் விவகாரமும் ஆகும்.

## குடியரசு தின வைபவங்களை புறக்கணிக்கக் கோரிக்கை

### பாபர் மசூதி செயற்கமிட்டி

(டில்லி)

அயோத்தியாவில் சரித்திரப் பிரசித்தி பெற்றதும், சர்ச்சைக்குரியதாக விளங்கியதுமான பாபர் மசூதி வளாகம் தகர்க்கப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக ஜனவரி 26-ம் திகதி வரும் இந்திய குடியரசுத் தினத்தை எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென அகில இந்திய பாபர் மசூதி செயற் கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தக் குடியரசுத் தினக் கொண்டாட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டுமெனவும், எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமெனவும் பாபர் மசூதி செயற் கமிட்டி இந்திய முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை பாபர் மசூதி செயற் கமிட்டியின் வேண்டுகோள் வகுப்பு வாத சக்திகளுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டுவதாகும் என்று முன்னாள் மத்திய அமைச்சரும், ஜனதாதள் தலைவருமான முப்தி முகமத் சையத் கூறியுள்ளார்.

## அயோத்தி சம்பவங்களுக்கும் கலவரத்திற்கும் தொடர்பில்லை

### - பிரதமர் நரசிம்மராவ்

[டில்லி]

அண்மையில் பம்பாயில் இடம்பெற்ற கலவரங்களுக்கும், டிசம்பர் ஆறாம் திகதியன்று அயோத்தியாவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

பம்பாய் ராஜ்பவனில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்துப் பேசிய பிரதமர் ராவ் மேலும் கூறுகையில்; சமூக விரோத சக்திகளும், சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் கும்பல்கள் சிலவும் தமது ஒரே நோக்கங்களை அடைவதற்காக எடுத்த முயற்சிதான் பம்பாய் கலவரங்கள் என்றும் வர்ணித்தார்.

நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியருக்கு

## உணவு மற்றும் மருந்து எடுத்துச்செல்ல இஸ்ரேல் அனுமதி

நாடு கடத்தப்பட்டு தெற்கு லெபனானின் எல்லையோரமாக பனிமலையில், தங்கியிருக்கும் பாலஸ்தீனியர்களுக்கு தனது கட்டுப்பாட்டில் உள்ள பிராந்தியத்தின் ஊடாக உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதற்கு இஸ்ரேலிய அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிற்கு அனுமதி அளித்துள்ளது.

இந்த உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களுடன் செல்லும் செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடன் நாடு கடத்தல் உத்தரவு மீளப்பெறப்பட்ட ஒன்பது பாலஸ்தீனியர்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கும் இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது.

நாடுகடத்தப்பட்ட அனைவரையும் இஸ்ரேல் மீள அழைத்துக்கொள்ள வேண்டுமெனவும் இல்லையேல் பொருளாதார தடை நடவடிக்கையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் வெள்ளை மாளிகை எச்சரிக்கை செய்திருந்தது தெரிந்ததே.

## ஈராக்கினுள் தரையிறங்க ஐ.நா. விமானங்களுக்கு அனுமதி?

### - ஈராக் அரசு அறிவிப்பு

(பக்தாத்)

ஈராக் பிராந்தியத்தினுள் நுழைவதற்கும் ஈராக்கில் தரையிறங்குவதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் விமானங்களை அனுமதிப்பது என்று ஈராக் அரசு தீர்மானித்துள்ளது. அமெரிக்கா விதித்திருந்த காலக்கெடு முடிவடைவதற்கு இரண்டு மணிநேரம் முன்பாக இந்த அறிவிப்பை ஈராக் அரசு வெளியிட்டது.

எனினும் தொடர்ந்தும் ஈராக் மீது நேச நாடுகளின் விமானத்தாக்குதல் நடக்குமாயின் ஐ. நா. விமானங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடினமானதாக இருக்கும் எனவும் ஈராக் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈராக் அரசின் அறிவிப்பு குறித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை திருப்தி தெரிவிக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

...தார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் புதுடில்லியில் நடைபெற்ற பின்னர் ...திக்கு முன்னபாக அறிவிக்க வேண்டுமெனவும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.

## தமிழக ஆளுநரிடம் கொடுத்த சுவாமியின் மகஜரின் நிலை என்ன?

### -- உச்சநீதிமன்றம் கேள்வி

(டில்லி)

ஜனதாக் கட்சியின் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியினால் தமிழக ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி ஆராயுமாறு இந்திய உச்சநீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

தனிப்பட்ட புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றை முதல்வர் ஜெயலலிதா நடத்தி வருகின்றார் என்பதால் அவர் சட்டப் பேரவை உறுப்பினர் பதவி வகிக்கவும், முதலமைச்சராக தொடர்ந்து நீடிக்கவும் தகுதியற்றவர் என்பதைச் சுட்டிக்காட்டி டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி ஆளுநரிடம் மகஜர் ஒன்றைக்கொடுத்திருந்தது தெரிந்ததே.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இதே போன்ற மகஜர்களை இந்திய குடியரசுத் தலைவரிடம் கொடுத்திருந்தது மட்டுமன்றி உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பீஷ்ம நாராயண்சிங்

## தமிழக ஆளுநர் பதவியை துறந்து தான் ஆகவேண்டும்

### மு. கருணாநிதி

[சென்னை]

கவர்னர் பங்கம் இருக்கும் கவர்னர் பீஷ்மநாராயண் சிங் பதவி விலகல் என்னும் அம்புப் படுக்கையில் படுத்தே தீர வேண்டும் என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது: ராஜீவ் கொலை வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையிலோ, அல்லது கொலை நடந்த போது எப்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்பதை ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட வர்மா கமிஷன் அறிக்கையிலோ எம்மீது சுமத்தப்பட்ட பழிபற்றி வாசகமோ ஏன் ஓர் எழுத்துக்கூட இல்லை. மாறாக வர்மா கமிஷன் என்ன அறிக்கை கொடுத்திருக்கிற .

இ காங்கிரசின் கைப்பாவையாக இருந்த சந்திரசேகர் ஆட்சி, பீஷ்மநாராயண்சிங் ஆட்சி, குழு மோதல் காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகளை குளறுபடி செய்த காங்கிரஸ் ஆட்சி ஆகியவற்றின் மீது வர்மா கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது.

பீஷ்மநாராயண் சிங்கின் பரிபாலனம் ராஜீவிற்கு பாதுகாப்பு அளிக்கத் தவறிய குற்றத்தை மட்டும் அல்ல தமிழ் நாட்டில் எதிர்க்கட்சியினர் மீது நடத்தப்படும் கொலைகள், வெறித் தாக்குதல்கள், பலகோடி மதிப்புள்ள உடைமைகள் அழிக்கப்படுவதை வேடிக்கை பார்க்கும் காவல் துறையினரின் அலட்சியத்திற்கும் உள்ளாகி உள்ள குற்றத்தையும் செய்துள்ளது.

அதனால் தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தருவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அரசுக்கு அறிவித்தது.

பல்வேறு கட்சிகள் கூட்டாக சேர்ந்து, பீஷ்மநாராயண்சிங் பதவி விலக வேண்டும் என அறிவித்துள்ளமைக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.

ஜெயலலிதா ஊழல்களை பட்டியலிட்டு அவரிடம் கொடுத்த புகார்களுக்கு வழக்கு தொடர அனுமதி கொடுக்காதது மட்டும் அல்ல இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று கடைந்தெடுத்த பொய்யையும் கூறியிருக்கிறார்.

அரசாங்க சட்டத்தை மீறி முதல் அமைச்சர் பங்குதாரராக இருப்பதாக ஒப்புக் கொண்டு பேசியும், அறிவித்தும் இருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் டான்சி நிலத்தை முறைகேடாக வாங்கி உள்ளதே? இது பீஷ்மருக்கு ஆதாரமாகப் படவில்லையா?

சிறிய விடயங்களுக்கெல்லாம் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்லும் அரசு ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் மட்டும் உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று நூறு கோடி மதிப்புள்ள அரச நிலத்தைத் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது இந்த பீஷ்மருக்கு ஆதாரமாகத் தெரியவில்லையா?

# சூரிய கட்டைக்காட்டு பகுதியில் ரெலோ மீது தாக்குதல்

## ஒருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் சூரிய கட்டைக் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த காவலரணிலிருந்து வெளியேறி தடைகளை அகற்றிக் கொண்டிருந்த ரெலோவினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது. காவலரணிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலை யடுத்து தடைகளை அகற்றிக் கொண்டிருந்த ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எம். எஸ் துப்பாக்கி 01
★ அதற்குரிய மகசின் 04
★ நடுத்தர ரவைகள் 106
★ ஜே ஆர். கைக்குண்டு 02
★ ஏ. கே. கோல்சரி 01

# டென்மார்க் அரசாங்கம் கலைக்கப்பட்டது

(டென்மார்க்)

இலங்கை தமிழ் அகதிகள் பிரச்சினை தொடர்பாக டென்மார்க் பிரதமர் பதவி விலகியதை அடுத்து அவரது ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது எனவும் இதனையடுத்து தேர்தல் ஒன்றை அந்நாடு எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை அகதிகள் தொடர்பான விவகாரத்தில் டென்மார்க் அரசாங்கம் பதவி விலக வேண்டி ஏற்பட்டுள்ளதை அடுத்து ஏனைய மேற்கு நாடுகள் அகதிகள் விடயத்தில் அவதானமாக நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஒரே குடும்பத்தில் மூவர் விசர்நாய்க்கடிக்கு இலக்கு

(மானிப்பாய்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கு விசர்நாய் ஒன்று கடித்துள்ளது. கடந்த வியாழனன்று நவாலி வடக்குப் பகுதியில் அமைந்த குமரையா என்பவரது வீட்டில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இவர்களின் வளர்ப்பு நாயே விசராகி இவ்வாறு கடித்து உள்ளது இதனைவிட நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) 3 பிள்ளைகளின் தாயான உஷா செல்வராஜா என்பவருக்கும் இவ்விசர்நாய் கடித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பகுதியில் நாய்களின் தொல்லையும், விசர்நாய்களும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# குமாரி இன்று புறப்படும்

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப்பொருள்களை ஏற்றிக்கொண்டு ''குமாரி'' கப்பல் இன்று கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்படவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இக்கப்பலில் அண்மையில் வெளியாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சையின் யாழ்.குடாநாட்டுப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் எடுத்துவரப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [பா]

## வீரச்சாவு



குரலமுதன் (விமல்)

திருமலை கடவாணை எனும் இடத்தில் 09-01-1993 பிற்பகல் 2.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் குரலமுதன் / விமல். (சித்திரவேல் சந்திரகாந்தன், 3-ம் வாட், பெரியவெளி தோப்பூர், மூதூர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வெளிவாரிப் பரீட்சைகள் பாதிக்கப்படலாம்

[கொழும்பு]

தென்னிலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டம் காரணமாக அவற்றால் நடாத்தப்படும் வெளிவாரி பட்டப்படிப்புகள் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

பேராதனை, சிறிஜெயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களுக்கு பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை ஒழுங்கு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மூதவை கூட்டப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு கலை முதல் தேர்வு முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை என்றும் இதனால் இவ்வாண்டு கலைமுதல் தேர்வு பரீட்சை குறிப்பிட்ட காலப் பகுதியில் நடைபெறும் சாத்தியம் இல்லையென்றும், தொடர்ந்தும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போராட்டம் நடைபெறுமானால் இவ்வருடம் பரீட்சை நடைபெறுவது சந்தேகமே என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# புதிய கடற்படை தளபதி நியமனம்

(கொழும்பு)

வடபகுதிக்கான புதிய கடற்படைத் தளபதியாக கடமையாற்ற கொமடோர் தயாசதகிரி இம்மாதம் முதலாம் திகதி தொட்க்கம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் நீண்டகாலமாக கடற்படைத் தலைமையலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாயிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# போர்க்கால கருத்தரங்கு

[கொழும்புத்துறை]

கோப்பாய் வடக்கு அருள்மித ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் முன்றலில் விடுதலைப்புலிகளின் ''போர்க்காலக் கருத்தரங்கு'' இன்று

# கடற்படையின் தாக்குதலால் மீனவர் பெரும் பாதிப்பு

[குருநகர்]

நேற்று அதிகாலை குடாநாட்டின் தென்பகுதிக் கடல் பிராந்தியத்திற்கு திடீரென வந்து சேர்ந்த கடற்படைப் பீரங்கிப் படகில் இருந்து மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் பீரங்கி - மற்றும் கலிபர் தாக்குதலைத் தொடுத்தனரென்றும், மீனவர்கள் வள்ளம் வலைகளைக் கடலில் விட்டு நீந்திக் கரை வந்தடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக அப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் காணப்படாதகால் ஆழ்கடல் பிரதேசத்திற்குள் நுழைந்த மீன்பிடி வள்ளங்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டன.

குருநகர் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன், பாப்பா ஆகியோரது மீன்பிடி வள்ளங்களில் சென்ற மீனவர்கள் கடலில் பாய்ந்து மயிரிழையில் தப்பி வந்தபோதும் மீன்பிடி வள்ளங்களும் வலைகளும் மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது [21]

# பலாலி ஷெல் வீச்சிற்கு பாடசாலை, வீடுகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

சிறிலங்கா படையினர் அதிகாலைவேளை பண்டத்தரிப்புப் பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் பாடசாலை மற்றும் சில வீடுகள் சேதமடைந்தன

நேற்று அதிகாலை 2 30 மணியளவில் பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகளை நோக்கி பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலும், மாதகல் கடற்பரப்பில் நிலை கொண்டிருந்த கடற்படைப் பீரங்கிப் படகிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. இவை பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி சேதமடைந்தது. சில்லாலைப் பகுதியில் வீழ்ந்ததனால் பல வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை நேற்றுக்காலையும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

# மேஜர் சோதியாவின் நினைவஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி

மகளிர் படைப் பிரிவின் முதல் பெண் போராளி மேஜர் சோதியாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் வடமராட்சி மகளிர் பொறுப்பாளர்செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

# முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும்

## சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

''நாடு இன்று முகம்கொடுக்கின்ற முக்கிய பிரச்சினை தொடர்பாக ரூபவாகினியில் விவாதிப்பதே சாலச் சிறந்தது எனவே அந்த விடயங்களும் சேர்க்கப்பட வேண்டும்'' என எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

பிரேமதாசாவின் இந்த நடவடிக்கைக்கு தாம் மகிழ்ச்சி தெரிவிப்பதாகவும் ஆனால் இன்று நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல், அரச பயங்கரவாதம், ஊழல்கள், பொது சொத்துக்கள் கையாடல் போன்ற அம்சங்களை ஜனாதிபதி தமது யோசனைகளுடன் சேர்த்து அப்படிப்பட்ட விவாதமே நாட்டுக்கு பிரயோசனமானதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளை ஜனாதிபதி சேர்த்துக் கொள்வதாக இருந்தால் தான் உடனடியாக விவாதத்திற்குஒழுங்கினை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் இதேபோன்று சகல பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கும் விவாதிக்க சந்தர்ப்பம கொடுக்க வேண்டும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

# பொதுக் கூட்டம்

இளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவலின்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா சுப்பையா

திருமதி நல்லம்மா சுப்பையா காலமானார். இவர் காலஞ்சென்ற திரு தில்லையம்பலம் சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் வள்ளிப்பிள்ளை(அறுகுவெளி தலங்கிளப்பு)தம்பதிகளின் மகளும், S S தருமலிங்கம் (மோகன் மில்க்பார்), திருமதிபரமேஸ்வரி அழகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், இராமதாஸன் சுவாமி (இராமதாசர் புத்தக படமாடம், சாவகச்சேரி), சாயுச்சிடபதி (இந்தியா), குகதாஸ்(இத்தாலி), ரகுதாஸ் (இத்தாலி), ராகவதாஸ் கனடா), குருபரதாஸ்(இத்தாலி), தயாபதி (ஆசிரியை, சத்தியம்மன் வித்தியாசாலை), அமராபதி(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தகுமாரி ரேணுகா இத்தாலி), கோமதி (இததாலி), ஜீவராணி (இததால ) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபனி, ப்ரதீப், பிரதீபா, சஞ்சிகா (இத்தாலி), பிரியங்கா (இத்தாலி)ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும், விஜயராஜன், கிருஸ்ணராஜன் லண்டன், திருமதி புஸ்பலதா சீதாலைநதன் லண்டன) ஆகியோரின் பெரியதாயுமாவார். அவ்

# தளபதி

சிக்கவில்லை'' இவ்வாறு இத்

நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரே குடும்பத்தில் மூவர் விசர்நாய்க்கடிக்கு இலக்கு

(மானிப்பாய்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கு விசர்நாய் ஒன்று கடித்துள்ளது. கடந்த வியாழனன்று நவாலி வடக்குப் பகுதியில் அமைந்த குமரையா என்பவரது வீட்டில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இவர்களின் வளர்ப்பு நாயே விசராகி இவ்வாறு கடித்து உள்ளது இதனைவிட நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) 3 பிள்ளைகளின் தாயான உஷா செல்வராஜா என்பவருக்கும் இவ்விசர்நாய் டித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பகுதியில் நாய்களின் தொல்லையும், விசர்நாய்களும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா சுப்பையா

திருமதி நல்லம்மா சுப்பையா காலமானார். இவர் காலஞ்சென்ற திரு தில்லையம்பலம் சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் வள்ளிப்பிள்ளை(அறுகுவெளி தலங்கிளப்பு)தம்பதிகளின் மகளும், S.S. தருமலிங்கம் (மோகன் மில்க்பார்), திருமதிபரமேஸ்வரி அழகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், இராமதாஸன் சுவாமி (இராமதாசர் புத்தக படமாடம், சாவகச்சேரி), சாயுச்சியபதி (இந்தியா), குகதாஸ்(இத்தாலி), ரகுதாஸ் (இத்தாலி), ராகவதாஸ் கனடா), குருபரதாஸ்(இத்தாலி), தயாபதி (ஆசிரியை, சத்தியம்மன் வித்தியாசாலை), அமராபதி(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தகுமாரி ரேணுகா இத்தாலி), கோமதி (இத்தாலி), ஜீவராணி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபானி, பிரதீப், பிரதீபா, சஞ்சீகா (இத்தாலி), பிரியங்கா (இத்தாலி)ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும், விஜயராஜன், கிருஸ்ணராஜன் லண்டன், திருபதி புஸ்பலதா சீதாலைந்தின் லண்டன) ஆகியோரின் பெரியதாயுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (ஞாயிறு 17-01-93) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சிவன் கோவிலடி, சாவகச்சேரி. [4015]

சு. இராமதாஸன் [மகன்]

### நாகமுத்து கந்தசாமி

ஏழாலையை பிறப்பிடமாகவும் மாவடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தசாமி 16-01-93-ல் காலமாகிவிட்டார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், கௌரிதேவி, கௌசலாதேவி, வீரச்சாவடைந்த சிறிக்குமார் [மாவீரன் கப்டன் மித்திரன்], ராஜ்குமார், ரேணுகாதேவி, சிவரேவதி, ரவிக்குமார் சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகன்மோகனின் மாமனாரும் ஆவார். இவரது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இளந்திரையன்

இல: 919,
மாவடி வீதி,
வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம். [சி/5799]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திகளின் பெறுபேறுகளும் எடுத்துவரப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [பா]

போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெளிவாரிப் பரீட்சைகள் பாதிக்கப்படலாம்

[கொழும்பு]

தென்னிலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டம் காரணமாக அவற்றால் நடாத்தப்படும் வெளிவாரி பட்டப் படிப்புகள் பாதிப்படையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

பேராதனை, சிறிஜெயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களுக்கு பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை ஒழுங்கு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மூதவை கூட்டப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு கலை முதல் தேர்வு முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை என்றும் இதனால் இவ்வாண்டு கலைமுதல் தேர்வு பரீட்சை குறிப்பிட்ட காலப் பகுதியில் நடைபெறும் சாத்தியம் இல்லையென்றும், தொடர்ந்தும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போராட்டம் நடைபெறுமானால் இவ்வருடம் பரீட்சை நடைபெறுவது சந்தேகமே என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புதிய கடற்படை தளபதி நியமனம்

(கொழும்பு)

வடபகுதிக்கான புதிய கடற்படைத் தளபதியாக கடமையாற்ற கொமடோர் தயாசத கிரி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் நீண்டகாலமாக கடற்படைத் தலைமையலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாயிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## போர்க்கால கருத்தரங்கு

[கொழும்புத்துறை]

கோப்பாய் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் முன்றலில் விடுதலைப்புலிகளின் ''போர்க்காலக் கருத்தரங்கு'' இன்று இரவு ஏழு மணிக்கு இடம் பெறும். [24]

### தளபதி

சிக்கவில்லை'' இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சுகப் பேச்சாளர் ஒருவர் பி.பி. ஸி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகப் பேச்சாளர் ஒருவரிடம் கிட்டுவின் நிலைபற்றி பி.பி. ஸியின் செய்தியாளர் கேட்டபோது,

''இந்தியக் கடற்பரப்பினுள் ஊடுருவிவந்த ஒரு கப்பலில் கிட்டு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுபற்றி தெளிவாகத் தெரியவில்லை. எனினும் இக்கப்பல் பின்னர் சேதமாக்கப்பட்டு அது கடலில் எரிந்துகொண்டிருக்கின்றது'' என்றார்.

### சென்னை

இருப்பதாக தெரிகிறது.'' என்றுமேலும் தெரிவித்தார்.

கப்பல் தகர்க்கப்படும்போது அல்லது தீப்பிடித்துக் கொள்ளும்போது கிட்டு அதில் இருந்திருப்பார் என்று நினைக்கிறீர்களா? அல்லது அவர் தரையிறக்கப்பட்டிருப்பார் என்று நினைக்கிறீர்களா? என்ற கேள்விக்கு ''சென்னை துறைமுகத்தினுள் கப்பல் செல்லும்போது கிட்டு அதில் இருந்திருக்கிறார் இது பற்றி உறுதியாக கூறமுடியும். இக்கப்பல் இந்தியக் கடற்படையால் சூழப்பட்டிருந்தது எனவேஇக்கப்பலின் பாதுகாப்பும், கிட்டுவின் பாதுகாப்பும் இந்தியக் கடற்படையின் பொறுப்பில் தான் இருந்தது இதனால் தான் பின்னால் வெளிவந்த கதைகள் பற்றி நான் மிகுந்த ஐயம் கொள்ளவேண்டியிருக்கின்றது. கிட்டு கப்பலில் இருந்து இறக்கப்பட்டு இந்திய அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது அவரது உயிருக்கு ஏதாவது நேர்ந்திருக்கலாம்'' என்றார்,

### அவசர

நோயாளர் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டனர். சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர்களை பெயர்களை பதிவு செய்ய வந்தபோதும் எண்பது நோயாளர் மட்டுமே பதிவு செய்யப்பட்டனர் என தெரிய வருகின்றது.

நோயாளர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட போதும் பதிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் அழைத்துச் செல்லப்படுவதில்லை என நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கள் சேதமடைந்தன

நேற்று அதிகாலை 2 30 மணியளவில் பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகளை நோக்கி பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலும், மாதகல் ... பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி சேதமடைந்தது. சில்லாலைப் பகுதியில் வீழ்ந்ததனால் பல வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை நேற்றுக்காலையும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## மேஜர் சோதியாவின் நினைவஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி

மகளிர் படைப் பிரிவின் முதல் பெண் போராளி மேஜர் சோதியாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் வடமராட்சி மகளிர் பொறுப்பாளர்செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

## முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும்

### சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

''நாடு இன்று முகம்கொடுக்கின்ற முக்கிய பிரச்சினை தொடர்பாக ரூபவாகினியில் விவாதிப்பதே சாலச் சிறந்தது எனவே அந்த விடயங்களும் சேர்க்கப்பட வேண்டும்'' என எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

பிரேமதாசாவின் இந்த நடவடிக்கைக்கு தாம் மகிழ்ச்சி தெரிவிப்பதாகவும் ஆனால் இன்று நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல், அரச பயங்கரவாதம், ஊழல்கள், பொது சொத்துக்கள் கையாடல் போன்ற அம்சங்களை ஜனாதிபதி தமது யோசனைகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்படிப்பட்ட விவாதமே நாட்டுக்கு பிரயோசனமானதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளை ஜனாதிபதி சேர்த்துக் கொள்வதாக இருந்தால் தான் உடனடியாக விவாதத்திற்குஒழுங்கினை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் இதேபோன்று சகல பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கும் விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

### கப்பலை

தோற்றுவிக்கும் என்ற நிலையிலேயே இந்திய கடற்படை புலிகளின் கப்பலை தமது கடற்பரப்பிற்குள் பலவந்தமாகக் கடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொதுக் கூட்டம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவலின் தொண்டர் சபையினரின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை ஒன்பது மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வை. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இப் பொதுக் கூட்டத்தில அருட்கவி சீ. விநாசித்தம்பிஆசியுரை வழங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8028

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

28-9917, 42-9325, 43-1062, 24 6065, 42-849,
26-9495, 27-4239. 24-8429. 24-0528 24-9773,
42-2862, 22-3938, 24-5137, 40-4429, 28 0940.
26-3390, 26-8419, 27-9756. 26-4429, 27-8999,
26-2108, 41-4719, 27-5535.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27 3803, 27-5099, 28-6546, 24-6336, 26-5560,
27 5158, 24-0336, 26-5405, 24-7084, 41-4129.
24-207, 24-2024, 27-7274, 24-1250, 41-6933,
24-6941.